(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.
C.C.No.144/2020

DEPOSITION OF WITNESS FOR PW.

Name சொக்கலிங்கம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.11.2023

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. இந்த வழக்கு தாக்கல் செய்யும் நேரத்தில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது புகாரில் ஒப்பந்த பத்திரத்தின் நகலை தாக்கல் செய்து விட்டு எனது பிரமணா வாக்கு மூலத்தில் ஒப்பந்த பத்திரம் பற்றி ஏன் குறிப்பிடவில்லை என்றால் ஏற்கனவே புகாருடன் ஒப்பந்த பத்திரத்தின் நகல் தாக்கல் செய்ததால் பிரமாண வாக்கு மூலத்ததில் குறிப்பிடவில்லை.

2.எனது பிரமாண வாக்கு மூலத்திலும் முதல் விசாரணையிலும் ஒப்பந்த பத்திரம் பற்றி சொல்லாதது உள்நோக்கம் கொண்டதால் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3.இந்த ஒப்பந்தம் குறித்து ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஐ.பி. வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் வழக்கு எண் எனக்கு தெரியாது.

4.ஒப்பந்த பத்திரத்திற்காகத் தான் காசோலையை வழங்கினேன் என்றால் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு வேறு வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், நான் அவ்வாறு தாக்கல் செய்யாததால் நான் காசோலை வழங்குவது பொய் என்றால் சரியல்ல.

5.பு.சா.1 காசோரைலயில் உள்ள கையெழுத்தும், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய அஞ்சல் ஒப்புகை அட்டையான பு.சா.4 ல் உள்ள கையெழுத்தும் ஒன்று தானா என்றால் அது எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள கையெழுத்து எதிரி ஜெயசங்கர் போட்டது தான்.

6.இரண்டிலும் உள்ள கையெழுத்துக்கள் வேறுபடுகிறது என்றாலும் காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல.

7.பு.சா.3 ஐ பெற்றுக் கொண்டு எதிரி அனுப்பிய பு.சா.5 பதில் அறிவிப்பிலும் காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

8.எனக்கும் ஆஜர் எதிரி ஜெயசங்கருக்கும் உள்ள பரிவர்த்தனைக்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9.எனக்கும் சீனிவாசன் டிம்பருக்கும் எந்தவித பரிவர்த்தனை இல்லை என்றால் சரியல்ல. சீனிவாச டிம்பருக்கும் எனக்கும் எந்த வித பரிவர்த்தனையும் இல்லை ஆனால் சீனிவாச டிம்பரின் உரிமையாளர் ஆஜர் எதிரி ஜெயசங்கருக்கும் எனக்கும் பரிவர்த்தனை உள்ளது.

10.நான் இந்த வழக்கை சீனிவாச டிம்பருக்கு எதிராக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11.காசோலை சீனிவாச டிம்பரின் காசோலை என்றால் சரிதான். சீனிவாச டிம்பர் மார்ட் ஓனர் என்ற அடிப்படையில் அவர் காசோலையை எனக்கு கொடுத்தார்.

12, ஆஜர் எதிரி ஜெயசங்கரின் தனிப்பட்ட பரிவர்த்தனைக்கு சீனிவாச டிம்பர் மார்ட் காசோலையை கொடுத்திருக்க மாட்டார் என்றாலும், சீனிவாச டிம்பருக்கு வருமானம் வரி செலுத்துவதால் அதை கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

13.சீனிவாச டிம்பர் சார்பாக தான் ஜெயசங்கர் காசோலையை தனிப்பட்ட கடனுக்காக வழங்கினார் என்ற விவரத்தை எனது புகாரிலும் பிரமாண வாக்கு மூலத்திலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் குறிப்பிடவில்லை.

14.சீனிவாச டிம்பர் வழங்கிய காசோலையை வைத்து சீனிவாச டிம்பரை வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்திருப்பது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

15.என்னுடைய முதல் வழக்கறிஞர் அறிவிப்பில் கடன் பாக்கி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

16.வியாபாரத்திற்காக பெறப்பட்ட கடனுக்காக எதிரி காசோலையை வழங்கியதாக தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

மக்கள் நீதிமன்ற பணிக்காக மாலை 4.10 குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் மாலை 4.45 மணிக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கப்பட்டது.

17.ஒப்பந்த்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் மீது ஆக்சிஸ் வங்கியில் கடன் நிலுவையில் உள்ளது. ஆக்சிஸ் வங்கியில் ரூபாய் 30 லட்சம் கடன் வாங்கியதாக தனது வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 30 லட்சம் கடன் இருக்கும் பட்சத்தில் ரூபாய் 27 லட்சத்து 50 ஆயிரத்திற்கு விற்பதாக ஒப்பந்தம் போடுவது சாத்தியமே இல்லை என்றால் சரியல்ல.

18. பு.சா.5 தனது பதில் அறிவிப்பில் சொத்தின் மதிப்பு மட்டும் 60 லட்சம் மேலும் 10 லட்சத்திற்கு மர வேலைகளை செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார். அது போல் ஒப்பந்தமே போடவில்லை என்றாலும் அது போலியாக தயார் செய்யப்பட்டது என்று பதில் அறிவிப்பில் குறிப்பிட்டள்ளரா என்றால் குறிப்டபிட்டுள்ளார் ஆனால் அது முற்றிலும் தவறானது.

19.எதிரி தனியாகஉவும் எந்த கடன் வாங்கவில்லை சீனிவாச டிம்பர் பெயரில் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

20.நான் கடன் வாங்கியதற்காக காசோலை வழங்கினார் என்று குறிப்பிட்டுவிட்டு மேலும் ஒப்பந்தத்திற்ககத்தான் தான் காசோலை வழங்கியதாக குறிப்பிட்டுள்ளது முற்றிலும் தவறானது என்றால் சரியல்ல.

21.எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் காசோலை எனது இல்லை என்றும், அதில் உள்ள கையெழுத்து எனது இல்லை என்று பதில் அறிவிப்பு அனுப்பிய பின்பு எதன் அடிப்படையில் 2 வதாக வங்கியில் காசோலையை சமர்ப்பித்தேன் என்றால் எதிரி போடசொன்னதால் போட்டேன்.

22.எந்த தேதியில் எந்த இடத்தில் அவ்வாறு காசோலையை வங்கியில் மீண்டும் சமர்ப்பிக்க கூறினார் என்றால் தேதி ஞாபகம் இல்லை நேரிலும் கை பேசியிலும் கூறினார். அது போல் நான் எனது 2 வது வழக்கறிஞர் அறிவிப்பிலும் எனது புகாரிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் சொல்லவில்லை என்றால் பிரமாண வாக்கு மூலத்தில் கூறியுள்ளேன்.

23.பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிடாமல் பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

24.சீனிவாச டிம்பருக்கு நான் வழக்கறிஞர்ங அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை சீனிவாச டிம்பரும் எதிரி ஜெயசங்கரும் எனக்கு தெரிந்தவரை ஒன்று தான்.

25.நானும் எதிரியும் 35 ஆண்டுகளாக நெசருங்கிய நண்பர்கள் என்பதால் அவருடைய அலுவலகத்திற்கு நான் அடிக்கடி செல்வேன் என்றால் சரிதான்.

26.அவருடைய இருக்கையில் நான் எப்போதும் அமர்ந்தது இல்லை. அவருடைய இருக்கையில் என்னை அமர வைத்துள்ளார் நான் அமர வைக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாரத்திற்கு குறைந்தது 5 நாட்கள் அவருடைய அலுவலகத்திற்கு செல்வேன் என்றால் அது போல் குறிப்பிட்டு சொல்ல முடியாது.

27.நான் ஜெயசங்கருக்கு நண்பர் என்ற முறையில் அவர் பல சொத்துக்கள் வாங்கும் போது அவருடன் செல்வேன் என்றால் சரிதான். அவ்வாறு பல சொத்துக்களை வாங்கும் போது அதற்கு உண்டான கமிஷன் தொகை எனக்கு கொடுப்பார் என்றால் சரியல்ல. நட்பு ரீதியாக நான் செய்தது தான். நான் 4 சொத்துக்கள் முன்னின்று வாங்கி கொடுத்துள்ளேன்.

28.அது போல் சொதது வாங்கி கொடுத்த போது கமிஷன் கொடுக்காததால் எனக்கும் எதிரிக்கும் முன் விரோதம்இருந்தது என்றால் சரியல்ல.

29.நான் எந்த நிதி நிறுவனத்திலும் பங்குதாரர் இல்லை. எனது குடும்பத்தை சேர்ந்தவர்கள் உள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் அதற்கான எந்த கூட்டத்திற்கு சென்றதில்லை.

30.எனது மனைவி வீட்டிற்காக வீட்டு கடன் 2002 ல் ஐசிஐசிஐ வங்கி வேலூர் கிளையில் ரூபாய் 3 லட்சத்திற்கு வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த கடனுக்கு ஜெயசங்கர் சூரிடியாக இருந்தார் என்றால் இல்லை.

31.நான் ஐசிஐசிஐ வங்கி வேலூர் கிளையில் கடன் பெறும் போது ஜெயசங்கர் சூரிடியாக கையொப்பம் செய்து கையொப்பம் செநய்யாத காசோலையை வங்கியிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. வங்கியில் 3 லட்சம் கடனுக்காக எந்த சூரிடியும் கேட்கவில்லை. ஹைபோதிகேஷனும் செய்யவில்லை.

32.எனது வங்கி கடனை திரும்பி செலுத்திவிட்டேன் பத்திரத்தையும் பெற்றுக் கொண்டேன். நான் ஜெயசங்கரை அழைத்துச் சென்று பத்திரத்தை திரும்பி வாங்கிச் சென்றேன் என்றால் சரியல்ல.

33.எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள எனது மனைவியின் கடனுக்காக கொடுக்கப்பட்ட காசோலையை மோசடியாக பயன்படுத்தியதாக குறிப்பிட்டுவிட்டு பதில் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் எதுவும் அனுப்பவில்லை. எனது புகாரிலும் எனது பிரமணா வாக்கு மூலத்திலும் எனது முதல் விசாரணையிலும் அதுபோல் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

34.முருகன், பூபதி ஆகிய இருவரும் என்னுடன் பணிசெய்து எனக்கு கீழ் பணி செய்துள்ளார்கள் என்றால் எனக்கு கீழ் முருகன் மட்டும் பணி செய்தார் பூபதி தலைமையிடத்தில் பணி செய்தார். இருவரும் நீண்ட நாட்கள் நண்பர்கள்.

35.நான் கூறியுள்ள ஒப்பந்தத்தில் தமேற்கூறிய இருவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டுள்ளதாக அவர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

36.நாங்கள் மூவரும் சேர்ந்து நடக்காத விஷயத்தை ஒப்பந்தமாக தயார் செய்ததாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு 5 பாண்டுகள் வெவ்வேறு தேதியில் வாங்கியதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு பதில் அறிவிப்பும் அனுப்பியுளார் அதில் உள்ள விவரம் ஞாபகம் இல்லை.

37.20.07.2019 ல் தங்களிடம் 5 புரோ நோட் முன்னிலையில் ரூபாய் 25 லட்சம் கடன் பெற்றதாக கூறி ஒரு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதிலில் எதிரி மறுப்பு தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அந்த பதில்அறிவிப்பில் எனக்கு அவ்வளவு தொகை கொடுப்பதற்கு சக்தி இல்லை என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார் அதைப்பற்றி அவருக்கு சொல்ல அவசியம் இல்லை. அதே போல் கடன் வாங்குவதற்கு எதிரிக்கு அவசியம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளரா என்றால் சரிதான்.

38.நான் எதிரியின் அலுவலகத்திற்கு அவ்வப்போது செல்லும் பொழுது எதிரியின் காசோலைகள் காணாமல் போனதை கேட்டதற்கு எனக்கும் எதிரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

39.எதிரி மீது இருந்த முன் விரோதத்தின் காரணமாகத்தான் காசோலை, பாண்டு, ஒப்பந்தம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. கொடுத்த பணத்தை கேட்டதற்கு தான் இவ்வழக்கு வந்தது.

40.எனது வருமான வரி கணக்கில் நான் கொடுத்த கடனையும் ஒப்பந்தத்தில் உள்ள முன் பணத்தையும் காண்பித்துள்ளேனா என்றால் 2018 ல் காண்பித்துள்ளேன். எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அந்த கணக்கு என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

41.காசோலையில் உள்ள கையெழுதது எதிரியின் கையெழுத்து இலர்லை என்றாலும் அவர் மீது உள்ள முன் விரோதத்தின் காரணமாக தயளார் செய்யப்பட்ஙட தவறான வழக்கு என்றால் சரியல்ல. அது அவருடைய கையெழுத்து தான் என்னுடைய முன்னிலையில் போடப்பட்ட கையெழுத்து தான். காசோலை எதிரியின் பணியாளர் எழுதினார். அவருடைய பெயர் எனக்கு தெரியாது. அவர் என்ன மையால் எழுதினார் என்றால் நீலம் தான். எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

42.கையெழுத்து போட தகுதியுள்ள எதிரி உண்மையில் காசோலையை அவர் தந்திருந்தால் காசோலையை அவர் தான் பூர்த்தி செய்திருப்பார் என்றால் சரியல்ல. அவரது பணியாளர்கள் நிறைய காசோலையை பூர்த்தி செய்தது நானே பார்த்துள்ளேன்.

43. ஜெயசங்கர் என்ன மையால் கையெழுத்து செய்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அந்த கையெழுத்து மை பேனாவினால் போடப்பட்டதா இங்க் பேனாவால் போடப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை.

44.பரிவர்த்தனையே இல்லாமல் காசோலையை மோசடியாக தயார் செய்து இவ்வழக்கு தாக்கல் செய்தது தண்டிக்கக்தக்கது என்றால் சரியல்ல.

45.09.08.2019 அன்று வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று காசோலை திரும்பியது. நான் அன்றைய தேதியில் தான் வங்கியில் காசோலையை தாக்கல் செய்தேன். அன்றைய தினமே காசோலை திரும்பியது. 2 வது முறை 10.09.2019 அன்று காசோலை வங்கியில் தாக்கல் செய்து அன்றைய தினமே போதிய பணம் இல்லாததால் வங்கியில் இருந்து திரும்பியது.

46.எந்தவிதமான முகாந்திரமும், காணமும் இன்றி 2 வது முறையாக காசோலையை வங்கியில் செலுத்தியதற்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி தான் 2 வது முறை காசோலையை வங்கியில் சமர்ப்பிக்க

சொன்னதாக சொல்வது புது சங்கதி அதை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

47.ஜெயசங்கர் மீது இருந்து முன் விரோதம் காரணமாக அவரை அவமானம் படுத்து வேண்டும் என்று காரணத்திற்காக வாங்காத கணனுக்கும் போடாத ஒப்பந்தத்திற்கும் கொடுக்காத காசோலைக்கும் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

48. பு.சா.3 மற்றும் பு.சா.4 பதில் அறிவிப்புகளில் ஜெயசங்கரின் கையெழுத்து இல்லை என்று குறிப்பிட்ட பிறகு அவர் கையெழுத்து தான் என்று நிரூபிப்பதற்கு ஏதேனும் ஆதரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை இல்லை.

49.அது உண்மையாக இருந்திருந்தால் நான் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

50.நான் வழக்கில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.